REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 13உ திங்கள் (27—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 14உ செவ்வாய் (28—6—55) [இதழ் 11

உதவியின் பெயரால் உழவனுக்கு தரப்படும் தொல்லை

"கிராம பாங்கிகளில் வட்டி 6¼ சதவிகிதமாக விதிக்கப்படுவது மிகவும் அதிகம். ரிசர்வ் பாங்கி மாநில பாங்கிக்கு 1½ சதவிகிதத்திற்குக் கடன் தருகிறது. மாநில பாங்கி, மாவட்ட மத்திய பாங்கிகளுக்கு 2½ சதவிகிதத்திற்கு கடன் தருகின்றது. எனவே கடன் வாங்குபவர் 6¼ சதவிகிதம்வட்டிக்கு கிராம பாங்கியில் கடன் வாங்க வேண்டியுள்ளது.

"1½ சதவிகிதத்தில் துவங்கும் வட்டி, கடன் வாங்குபவர் கைக்கு வரும்போது 6¼ சதவிகிதமாக உருவெடுத்து விடுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

சங்கிலியின் பலம்—வளையத்தின் பலவீனம்

அண்ணா தரும் உதாரணம்

'தொல்லை'கள் தருவது தோழமை உணர்வால்தான்!

சென்னை பாராட்டுக் கூட்டத்தில் விளக்கம்

"பலர் பார்த்துப் பாராட்டத்தக்க காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்பதற்காகக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைக் காட்டிலும், சிலர் பார்த்து அருவருக்கத்தக்க காரியங்களைச் செய்யாதிருப்பது நலமாகும்;

"நாம் செய்கிற காரியங்கள், மேலும் பலர் நம்மைப் புரிந்துகொள்ளவும், நம்மீது விரோதம் பாராட்டுவோர் அந்த விரோதத்தைக் குறைத்துக்கொள்ளவும், எதிர்க்க நினைப்போர் எதிர்ப்பு நினைப்பைக் கைவிடவுமான வகையில் அமைய வேண்டும்,"

—இவ்வாறு அண்ணா அவர்கள், சென்னை 'அறிவகத்'தில். 26-6-55 மாலை நடைபெற்ற சென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் கே. எம் கண்ணபிரான், புதிய செயலாளர் தோழர் இளம்பரிதி ஆகியோருக்கு சென்னை மாவட்டக் கழகச் சார்பில் தரப்பட்ட பாராட்டு—வரவேற்பு விழாக் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா பேசியதாவது:—

"சென்னை மாவட்டத்தில் கடந்த காலத்தில் கழகம் மிகச் சிறந்த பணியாற்றியிருக்கிறது; பொதுவாகவே, சென்னையில் உள்ள எல்லாக் கிளைகளும் நல்ல பல பணி புரிந்திருக்கின்றன.

"சென்னைமாவட்டத்தில் வேறு சில மாவட்டங்களைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையில்தான் கிளைகள் உள்ளன; என்றாலும், சென்னையின் மாண்பிற்குக் காரணம், சென்னையில் நடத்தப்படும் எந்தக் காரியமும் அரசாங்கத்தின் கவனத்தையும், கண்காணிப்பையும் பெறுமென்பதால்தான்; சென்னைக் கழகத்திற்கு வாய்ப்புகளும் அதிகம்; அதிகமான வாய்ப்புகளைப் போலவே, அதிகமான பொறுப்பும் உண்டு.

"கடந்த காலத்தில், கழகத்தின் ஆற்றலைக் காட்டும் வகையில் நாம் போராட்டங்கள் நடத்தியிருக்கிறோம்.

"நாம் ஆற்றல் தொண்டவர்கள் என்பதுடன் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு வருபவர்கள் என்பதற்கு நாம் பல காரியங்கள் செய்திருக்கிறோம்.

"தஞ்சையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தரும்பொருட்டு நாம் நிதி திரட்டினோம்; திரட்டிய சுமார் ரூ. 30 ஆயிரத்திற்கும், கைத்தறித் துணிகள் வாங்கி, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தந்தோம்;

"ஆனால், சென்னையில் உள்ள பல வட்டங்களிலிருக்கும் தோழர்கள் வீடுவீடாகச் சென்று துணிமணிகள், அணிகள், பொருள்கள் எல்லாம் திரட்டிவந்து 'அறிவகத்'தில் சேர்த்திருந்தனர்; அந்தப் பொருள்களைக் கண்ட நேரத்தில் நான் பெற்ற மகிழ்ச்சி—நிவாரணத்திற்கென நாம் திரட்டிய 30 ஆயிரம் ரூபாயைத் தடவிப்பார்த்த போதுகூடக் கிடைக்கவில்லை; ஏனெனில், துணிமணிகளை வீடுகளிலிருந்து சுலபத்தில் பெற்றுவிட முடியாது.

"ஒவ்வொரு வீட்டுவாசலிலும் நமது தோழர்கள் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் அவதியை எடுத்துச் சொல்லி, அவர்களின் அல்லல் போக்க கழகம் மேற்கொண்டிருக்கும் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும், கழகத்தின் லட்சியம் பற்றியும் விளக்கம் தந்திருப்பார்கள்; இந்த விளக்க உரை கேட்ட பின்னர்தான். மக்கள் துணிமணிகளை மனமுவந்து தந்திருக்க முடியும்.

"பின்னர், கைத்தறித் துணிகளை தோளிலே தூக்கி விற்றோம்—நெசவாளர் துயர் துடைக்க.

"இப்படி நாம் செய்யும் ஆக்க வேலைகள், மக்களுக்கு, 'நாம் ஒரு ஜீவ சக்தியுடைய இயக்கத்தவர்' என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றது

மேலும் நெருங்கிய தொடர்பு கொள்ள!

"நமது கழகத் தோழர்கள் அந்தந்த வட்டார மக்களுடன் இன்னும் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும்; வீடு வீடாகச் சென்று மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

"இலவசப் படிப்பகங்கள், இராப் பள்ளிகள் முதலியன வட்டந்தோறும் நடத்த வேண்டும்;

"பலவகையான ஆக்க வேலைகளை மேற்கொள்ளுவதின் மூலம் மக்களுக்கு நம்மிடம் இருக்கும் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

"இப்போது நமது கழக மாளிகை, 'அறிவகம்' சில பல இடங்களில் கலனாகிவிட்டிருக்கிறது; இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் நாம் அதனைப் பழுது பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்;

"அடுத்து, நாம், கழகத்திற்கென சென்னையில் ஒரு தனி மைதானம் வாங்கவிருக்கிறோம் என்று நான் முன்பே தெரிவித்தேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஆ. வெ. முத்தையா இயற்கை எய்தினர்

சுயமரியாதை இயக்க ஆரம்ப காலத்தில் அதற்கு ஆதரவாகப் பல கூட்டங்கள், மாநாடுகள் ஆகியவற்றுக்குத் தலைமைதாங்கி மக்களுக்கு அறிவுரையாற்றிய முன்னாள் பிரெஞ்சிந்திய அமைச்சர் ஆ. வெ முத்தையா அவர்கள், சென்ற 23—6—55 இரவு காலமானார் என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

அவரது உடல் 24—6—55 மாலை 6 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

அவர் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்து புதுவை வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் இரங்கல் உரை வாசிக்கப்பட்டது. அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"'பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கத்தால் நாடு நலம் பெறும்; மக்கள் அறிவு பெறுவர்; புது வாழ்வு மலரும்,' என்று கண்டு—மக்கள் கண்மூடித்தனமாக அதை எதிர்த்தபோதும்—தாங்கள் துணிவுடன் ஆதரித்தீர்! பல கூட்டங்களுக்குத் தலைமை வகித்தீர்! சென்னை மாவட்டச் சுயமரியாதை மாநாடுகளுக்குத் தலைமை தாங்கி மடமை அகல—அறிவு மிளிர வீர உரையாற்றி, நாட்டில் விழிப்புணர்ச்சியூட்டினீர்! பகுத்தறிவாளருக்குப் பக்கத் துணையாயிருந்தீர்! அந்தோ, இன்று உம் ஆதரவை இழந்தோம்; அறிவுரையை இழந்தோம்; ஆற்றொணா துயரை அடைந்தோம்."

'தனி அலுவலகமும், புத்தகசாலையும் அமைக்க வேண்டும்'

"'அறிவகம்' அனைவரின் பொதுச் சொத்து"

மாவட்ட கழகத் தோழர்களுக்கு காஞ்சி-கல்யாணசுந்தரம் யோசனை

"இந்த 'அறிவகம்', மாநிலமெங்கணுமுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் பொதுச் சொத்தாகும். இதில், வேறெல்லா மாவட்டத் தோழர்களுக்கிருக்கும் உரிமையைக் காட்டிலும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் அதிக உரிமை இருப்பதாகக் கூறமுடியாது; எனவே, சென்னை மாவட்டக் கழகத்திற்கென நகரில், ஒரு தனிக் கட்டிடம் வாங்கியாக வேண்டும்;

"ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் பொதுவான கட்டிடங்கள், புத்தகசாலைகள் இருக்க வேண்டியது மிக அவசியமானதாகும்; அந்த வகையில், தி. மு. கழகத்திற்கென 'அறிவகம்' இருக்கிறது; சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள், தங்கள் வளர்ச்சி கருதி, நல்லதோர் புத்தக சாலையும், அந்த புத்தகசாலை வைத்துக் கொள்வதற்கேற்ற இடமும் தேடியாக வேண்டும்,"

—என்று, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், சென்னை 'அறிவக'த்தில் 26—6—55 அன்று நடைபெற்ற பாராட்டு, வரவேற்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இரண்டாண்டுகளுக்கு முன், நமது கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது சென்னை மாவட்டக் கழகம் ஆற்றியுள்ள பெரும் பணி, பலரின் பாராட்டுதலையும் பெறத்தான் செய்தது; அந்தப் பணிகளை மேற்கொண்ட கழகத் தோழர்களைப் பாராட்டவும், மேலும பல பணிகளைச் செய்ய முன்வந்து பொறுப்பேற்றிருப்பவர்களை வரவேற்று ஊக்கமூட்டவுமாக விழா நடைபெறுவது சிறப்பானதே;

"கடந்த காலத்தில் சென்னை மாவட்டம் ஆற்றியுள்ள பணிக்காக பாராட்டுத் தெரிவிக்கும் நேரத்தில் புதிய செயலாளர் மேலும் பலரின் பாராட்டுதலுக்கு தன்னை ஆளாக்கிக் கொள்ளும் வகையில், சில பல காரியங்களைச் செய்தாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

★

அதற்கு முன் பேசிய தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"கடந்த மும்முனைப் போராட்ட காலத்தில் சென்னை மாவட்டக் கழகம் மகத்தான பணியாற்றியிருக்கிறது. அதற்கு முன்பு, நிவாரண நிதி சேகரிக்கும்போதும், கைத்தறி ஆடைகளை விற்றபோதும் சென்னை மாவட்டக் கழகத்தவர் சீரியதோர் பணியாற்றியிருக்கிறார்கள்.

"போராட்டத்திற்குப் பிறகு, கல்லக்குடி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் போரில் ஈடுபட்ட நமது தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளுக்காக நாம் நிதி திரட்ட வேண்டியவர்களானோம்; அப்போது நாம் இருபதாயிரம் கேட்டோம்; மக்கள், 80 ஆயிரம் ரூபாய் வரையில் தந்தார்கள்; அந்த அளவுக்கு மக்கள் நமக்கு தந்த ஆதரவினைத் திரட்டுவதிலும், சென்னை மாவட்டத் தோழர்கள் பெரும் பங்கேற்றனர்.

"இவற்றினை எல்லாம் முன்நின்று நடத்திய தோழர் கண்ணபிரானை பாராட்டவும், தொடர்ந்து பணியாற்றும் தோழர் இளம்பரிதி அவர்களுக்கு நமது ஒத்துழைப்பைத் தருவோம் என்ற உறுதி தந்தும் அவரை வரவேற்கவுமான இந்த விழாவில், நான் கூறக்கூடியதெல்லாம், நமது கழகத் தோழர்கள் தங்களிடையே ஏதேனும் சிறு சிறு கருத்து மாறுபாடுகள் இருக்குமானால் அவற்றை மறந்து, பொறுப்புணர்ச்சியோடு ஒற்றுமை

(4-ம் பக்கம் பார்க்க)

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்குப் பொன்னாடை!

அண்மையில் நடைபெற்ற தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில், மேற்படி சங்கக் கட்டிட நிதிக்காக வருகிற ஆகஸ்டு மாதத்தில் ஒரு கலை விழா நடத்துவதென்றும், அவ்விழாவில் புகழ் பெற்ற நடிகர்களின் நாடகங்களை நடத்துவதென்றும், அதுபோது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்துவது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது

பல ஆண்டுக் காலமாகக் கலைத் துறையில் ஈடுபட்டு நல்லறிவுக் கருத்துக்களை நாட்டில் பரவச் செய்த அவரது நாட்டுழைப்பினை பாராட்டவே பொன்னாடை போர்த்துவதென்று அச்சங்கத்தவர் முடிவு செய்துள்ளனராம்.

பொன்னாடைக்குரிய செலவுகளனைத்தையும் தாம் ஏற்றுக்கொள்வதாக நடிகர் தோழர் டி. கே. சண்முகம் தெரிவித்துள்ளாராம்!

'தினத்தந்தி' வேலை

வழக்கு தொடரப்படும்?

25—6—55 வெளியூர் 'தினத் தந்தி' இதழில், 'அண்ணாதுரை தலைமையில், புரோகிதர் மந்திரம் சொல்ல, திருத்துறைப்பூண்டியைச்சார்ந்த வேலூரில் நடைபெற்றதாக வந்த திருமணச் செய்தியைக் கண்ட மணமக்கள் வீட்டார், ஏராளமான மக்கள்முன்னிலையில் நடைபெற்ற அத்திருமண நிகழ்ச்சியைத் திரித்து வெளியிட்டிருப்பதால், தோழர்களிடமும் ஏனையோரிடமும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மான நஷ்டத்துக்காக, தக்க நடவடிக்கையை எடுக்க வழக்கறிஞர்களை நாடியிருப்பதாக, திருவாரூர் தி. மு. கழகச் செயலாளர் டாக்டர் விசயராகவன் அறிவிக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—6—'55 திங்கள்

'திருப்பதி'யைக் காணீர்!

திருப்பதியில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கு என, ஆந்திர சர்க்காருக்கு ரூ. 50 லட்சம் தர திருமலை—திருப்பதி 'தேவஸ்தான போர்டு' முன்வந்திருக்கிறது என்ற ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி கடந்த வாரம் வெளிவந்தது.

'திருப்பதி—தீராத வினையெல்லாம் தீர்த்துவைக்கும் கோவிந்தன் எழுந்தருளியிருக்கும் திருத்தலம்' என பக்தர்கள் போற்றித் தொழும் இடம்.

அந்தக் கோவிலுக்கு இந்த நாட்டு மக்கள் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ரூபாய் காணிக்கையாகக் கொட்டித் தந்து, தாங்கள் செய்துள்ள பாவங்களுக்கு மன்னிப்புத் தேடி 'பரலோக பதவி'யடைய முயற்சித்து வருகின்றனர், பல நூற்றுண்டுக்காலமாக.

பொதுவாகவே இந்த நாட்டு மக்கள், தங்கள் உழைப்பின் விளைவில் பெரும் பகுதியை தங்களின் பாப விமோசனத்திற்கெனக் கூறி அறியாமைக்குக் காவு கொடுத்துவருகின்றனர் என்பது ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வேண்டியதல்ல!

மக்கள் தங்கள் அறியாமையால் பறிகொடுக்கும் பெரும் செல்வம் 'ஏழுமலையான்', 'ரங்கனதர்', 'மீனுட்சி', 'ராமனுதன்', 'நடராசர்' என்ற எண்ணற்ற தெய்வங்களிடமும், அந்ததெய்வங்களை, நாட்டு மக்களின் உள்ளக் கோவிலிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகி விடாமல் பார்த்துக் கொள்ளும் பெரும் பொறுப்பேற்றிருக்கும் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் போன்ற மதப் பாதுகாப்பு மடங்களிலும் குவிந்து கிடக்கின்றது.

அந்த மடங்களிலும்,கோவில்களிலும் குவிந்து இருக்கும் கோடிக்கணக்கான செல்வமும், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் 'பூலோக சொர்க்க' வாழ்வுக்காகப் பயன்பட்டு வருகிறது என்பதும் உலகமறிந்த உண்மையாகும்.

கோவில்களும், மடங்களும் மக்களின் அறியாமையை வளர்த்து, மூடப் பழக்கங்கள் பலவற்றைக் கற்பித்து, அவர்களின் வாழ்க்கையைச் சூறையாடிச் சேர்த்து வைத்திருக்கும் செல்வத்தை, அந்தக் கோவில்களும், மடங்களும்—எவரின் வாழ்வு உய்ய வழி காட்டும் கைகாட்டிகள் என்று கூறப்படுகின்றனவோ —அந்த மக்களின் வாழ்க்கை நலனுக்குப் பயன்பட வேண்டும் என்று நமது கழகம் பன்னிப் பன்னி எடுத்துக் கூறி வந்திருக்கிறது.

எத்தனையோ ஆயிரம் மைல்களுக் கப்பால் இருந்து வந்து இங்கு குடியேறியுள்ள கிறுத்துவ மத நிறுவனங்கள், எத்தனை எத்தனை காரியங்களுக்காக—இலவச பிரசவ விடுதிகள், மருத்துவ மனைகள், கல்விக் கூடங்கள், புத்தகசாலைகள், இவைபோன்ற காரியங்கள் — செய்திருக்கின்றன. அந்த வெளிநாட்டு நிறுவனங்களின் சீரிய உதாரணங்களைக் கண்டபிறகேனும், இங்குள்ள மதபோதகர்களுக்கு, 'மக்கள் நலனுக்குச் செல்வத்தைச் செலவிடவேண்டும்,' என்ற நல்லெண்ணம் பிறக்க வேண்டாமா?

"ஆண்டவனை எங்கே போய் தேடுகிருய்? கையில் ஜெபமாலையும், கமண்டலமும், மேனியில் வெண்ணீறும் அணிந்து, திருக்குளங்களில் மூழ்கி, திருத்தலங்களில் 'சேவை' செய்தா ஆண்டவனைத் தேடுகிருய்? ஆண்டவன் அங்கெல்லாம் கிடைக்க மாட்டான்;

"'இதோ! ஆண்டவனின் படைப்பு இவ்வுலகம்' என்று கூறுகிருயே—அந்த உலகத்தில், ஒட்டிய உடலும், வாடிய கன்னமும், குழி விழுந்த கண்களும், உலர்ந்த வாயுமாக அழுக்கு படிந்த கந்தல் ஆடையுடன் காட்சி தருகிருனே, மனிதன்—அவனிடம் தான் நீ ஆண்டவனைக்காண வேண்டும்; அவனது வளைந்த வாழ்வை நிமிர்த்த, நீ செய்யும் பணிதான் ஆண்டவனுக்குச் செய்யும் திருப்பணியாகும்,"

என்று, 'கீதாஞ்சலி' மொழிந்த ரவிந்திரநாத் தாகூரின் பொன்மொழிகளை எடுத்துக் காட்டுகளாக்கி—விளக்கிக் கூறி வந்திருக்கிறேம்; தொடர்ந்து கூறியும் வருகிறேம்.

நமது கழகம் ஆற்றிவரும் அந்த மகத்தான பணி, பலன் தராமல் போய்விட முடியாது —போய்விடவுமில்லை.

திருமலை—திருப்பதி தேவஸ்தானம், கோவில் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, ஏற்கனவே 'வெங்கடேசப் பெருமான்' பெயரில் பல்கலைக் கழகம் ஒன்றை பல இலட்ச ரூபாய் செலவில் நடத்தி வருகிறது. இப்போது மருத்துவக் கல்லூரி அமைக்க ரூ. 50 லட்சம தருவதாகத் தெரிவித்துள்ளது.

அந்த கோவில் நிர்வாகிகளின் முன்மாதிரியான செயல்கள், அரங்கநாதர்களையும், மீனுட்சிகளையும் காப்பாற்றி வருபவர்களுக்குப் பாடமாக அமையவேண்டும்; திருவாவடுதுறைகளும், திருப்பனந்தாள்களும், திருமலை—திருப்பதியார் பெற்ற பெரு நோக்கினைப் பெறவேண்டும்.

ஆண்டவர்கள் பெயரால் சாப்பிட்டதுபோக, எஞ்சியுள்ள செல்வத்தை, ஏழை, எளியோர் வாழ்வு பெற — வாழ்வில் வளம் பெற—பயன்படுத்த இந்தக் கோவில்களும், மடங்களும் முன்வர வேண்டுமென, மாறிவரும் 'காலம்' அவர்களுக்கு கட்டளையிடுகிறது; இதை அவர்கள் மதித்து நடக்கத் தவறினல், அடுத்த கட்டம் — ஆண்டவர்களின் பெயரால், 'பூலோக சொர்க்க'த்தில் ஊறித் திளைத்திருப்போரின் சுகபோகத்தைச் சுக்கு நூருக்கும் கட்டமாகத்தான் இருக்கும் என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

'மகாமகங்களை'ச் சிறப்பித்துச் சீராட்டுவதும், சபாநாயகர்களின் இருப்பிடத்தைச் செப்பனிடுவது மட்டுமே நம் வேலை என்றெண்ணிவிடுபவர்கள், மாற்றப்பட்டுவரும் காலத்தின் கடும்பசியைத் தணிக்க மட்டுமே பயன்படுவர் என்பதை அவர்களுக்கு முன் கூட்டியே சொல்லிவைக்கிறேம்.

விடுதலைப் போர் வீரர்களுக்குப் பட்டம்

பர்மா விடுதலைப் போரில் பங்கு பெற்றவர்களுக்கு புதியதொரு பட்டம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

இரங்கூன் மாவட்ட நீதிபதியும், போலீஸ் கமிஷனருமான அதிகாரி, பத்திரிகையாளரிடம் பேசுகையில், கடந்த 1942 ஜனவரியிலிருந்து, விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களுக்கு இந்தப் பட்டம் தரப்படும் என்றும், அவர்களில் பலர் காலமாகிவிட்டிருந்தாலும் அவர்களுக்கும் தரப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ஆனல், தேசத் துரோகம் முதலிய குற்றங்களுக்காகத் தண்டிக்கப் பட்டவர்கள், இந்த பட்டமளிப்பிலிருந்து ஒதுக்கப்படுவர் என்று தெரியவருகிறது.

ஆண்டுதோறும் ரூ. 45 இலட்சம் பெறுமான சர்க்கரை

உற்பத்தி செய்ய ரூ. 66 இலட்சம் முதலீட்டில் தொழிற்சாலை

பம்பாய் மாநில சர்க்காரின் பிருமாண்டமான முயற்சி

ஆண்டு தோறும் ரூ. 45 லட்சம் பெறுமான சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய பிரம்மாண்டமானதோர் தொழிற்சாலை ஒன்றை பர்தோலி பகுதியில் கூட்டுறவு முறையில் துவங்க பம்பாய் மாநில சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம்.

சுமார் 3,000 ஏகர் நிலமுடைய 1,200 தொழிலாளர்கள், தொழிற்சாலை முதலீடாக 8 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கின்றனர் என்றும், இன்னும் எட்டு லட்சம் ரூபாய் வேறு வழிகளில் முதலீட்டிற்காகத் திரட்டப்படும் என்றும் தெரியவருகிறது.

மாநில அரசாங்கம், ரூ. 10 லட்சம் தருவதுடன், மத்திய நிதி கார்ப்பொரேஷன் ரூ 40 லட்சமும் மூலதனம் போட ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

1956-ம் ஆண்டு இறுதியில் இந்தத் தொழிற்சாலை உற்பத்தி துவங்குமாம.

சிறுமிக்கு மணம் முடிக்காதே!

தாலி கட்டும் நேரத்தில் தடை உத்திரவு!

சின்னூர், ஜூன் 25—

'மணப் பெண்ணுக்கு 15 வயது நிரம்பவில்லை' என்று கூறி, திருமணத்தைத் தடை செய்து, நகர நீதிபதி உத்திரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

குழந்தை மணத்தடுப்புச் சட்டத்தின்கீழ் அந்தத் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

பி. பி. தாம்பே என்ற அந்த நீதிபதி; முறையே மணமகள், மணமகன் ஆகியோரது தந்தையரான கிசான்பாவர், விதுஷிந்தே என்ற இருவருக்கும், தங்கள் பிள்ளைகளின் திருமணம் நடைபெறக் கூடாது என்று உத்திரவிட்டார்.

'இன்னும் 45 நாட்களில் பெண்ணுக்கு 15 வயதாகிவிடும்,' என்று கூறி, தடையை நீக்கக் கோரினராம்—மணமகளின் தந்தை!

ஆனல், நீதிபதி மறுத்துவிட்டார் என்று தெரியவருகிறது.

சமுதாய நலத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ், 1954 செப்டம்பர் திங்கள் வரை கிராமங்களில் மொத்தம் 10,373 வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டன மொத்தம் 96,362 வீடுகள் புதுப்பிக்கப்பட்டன.

இந்தியாவில், தற்போது நெல சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலப் பரப்பின் மொத்த விஸ்தீரணம் 75 கோடி ஏகரும், சிறு தானியங்கள் சாகுபடி செய்யப் பட்டுவரும் நிலப்பரப்பின் மொத்த விஸ்தீரணம் 8·5 கோடி ஏக்கரும் ஆகும்.

'பறக்கும் தட்டு' பற்றி அறிய!

மகாபாரதம், இராமாயணம் பயில வேண்டுமாம்!

மைசூர் கல்வி மந்திரியின் பிதற்றல்

மைசூர், ஜூன் 25—

"சமஸ்கிருதத்தில் உள்ள மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றைப் படியுங்கள்; பறக்கும் தட்டுகள் பற்றியவை மட்டுமின்றி, அவற்றைவிட அதிசயமான இயந்திரங்கள் பற்றிய வர்ணனைகள் அவற்றில் இருப்பதைக் காணலாம்,"

என்று மைசூர் மாநில கல்வி இலாகா மந்திரி ஏ. ஜி. இராமச்சந்திர ராவ் சவமொழி விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

வருமான வரி தராதவர்கள்

நகர சபைகளுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய முடியாது

சென்னை, ஜூன் 24—

"ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் வருமான வரி கட்டிவிட்டதற்கான அத்தாட்சி பத்திரத்தை தாக்கல் செய்யத் தவறினல் விலைப் புள்ளி(டெண்டர்)மனுப் போடுபவர்கள் கட்டியுள்ள ஜாமீன் தொகை பறிமுதலாகுவதுடன், 'ஒப்பந்தம்' கூட பறிமுதல் செய்யப்பட வழியாகும்; விலைப்புள்ளி கோரும் விளம்பரத்திலேயே நிபந்தனை இருக்க வேண்டும்,"

என்று, சென்னை நகரசபை நிர்வாக அதிகாரி, மற்றும் மாநில மெங்கணுமுள்ள நகரசபை நிர்வாக அதிகாரிகளுக்கு சர்க்கார் அனுப்பியுள்ள உத்திரவு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்

கல்லூரிக் கல்வி பெற மத்திய அரசாங்கம் உதவும்

சென்னை, ஜூன் 24—

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலை சாதியினர் ஆகிய மாணவர்களுக்கு கல்லூரி படிப்புக்கான உபகாரச் சம்பளம் தரும் பொறுப்பு முழுவதையும், மத்திய சர்க்கார், இந்த நடப்பு ஆண்டிலிருந்து ஏற்றுக் கொள்ளும் என்று தெரிய வருகிறது.

இதனல் சென்னை மாநில சர்க்காருக்கு ஆண்டுதோறும் ரூ. 3 லட்சம் செலவு மிச்சப்படும் என்றும் கூறப்படுகிறது.

மாநில தாழ்த்தப்பட்டோர் க்ஷேமலை போர்டு இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதென எல்லாக் கல்லூரி தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுவிட்டதாம்.

ம. சோ. கட்சியில் பிளவு: மேலும் விரிகிறது!

டெல்லி நகரக் கிளையைக் கலைத்து மாநில நிர்வாகக் குழு தீர்மானம்

புதுடில்லி நகர ம. சோ. கட்சிக் கிளையின் நிர்வாகக் குழுவை நீக்கிவைத்து, புதுடில்லி மாநில ம. சோ. கட்சியின் செயற்குழு முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

மேலும், புதுடில்லி கிளையின் நிர்வாகத்தை மேற்கொள்ள ஒரு 'அட்ஹாக்' குழுவையும் நியமித்திருக்கிறதாம்.

திருமதி சுசேதா கிருபளானியின் தலைமையில் நடைபெற்ற டெல்லி மாநில ம. சோ. கட்சி செயற்குழுக் கூட்டத்திற்கு எல்லா உறுப்பினர்களும் தவருது வருகை தந்திருந்தனராம்.

டெல்லி கிளையின் அமைப்பாளராயிருந்த பிரிஜ்மோகன் டோன் என்பாரைப் பதவியிலிருந்து நீக்கியும், ஓம்கார்நாத் சர்மா என்பவரை இரண்டாண்டுகளுக்கு கட்சியிலிருந்து விலக்கிவைத்தும், செயற்குழு, முடிவுகள் மேற்கொண்டிருக்கிறது

அவர்கள் இருவர் மீதும் இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அவர்களுடைய கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய நடத்தையே என்று கூறப்படுகிறது.

டாக்டர் ராம் மனோகர் லோகியாவின் செல்வாக்கில் இந்த டில்லி நகரக் கிளை இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், உ. பி. மாநில ம. சோ. கட்சி மீது தேசிய நிர்வாகக் குழு மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டித்து இந்த டில்லி நகர செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியதுடன், காஜிப்பூரில் நடைபெற்ற ம. சோ. மாநாட்டிற்கு வாழ்த்தும் அனுப்பி வைத்திருந்ததாம்.

காரைக்குடியில் தொழிற் பயிற்சிக்கூடம்

காரைக்குடியில் 'அழகப்பா பாலி டெக்னிக்' என்ற பெயரில் புதியதொரு தொழிற் பயிற்சிப் பள்ளிக்கூடம் திறக்கப்படும்

ஆண்டுதோறும் 100 மாணவர்களுக்கு சிவில், மின்சார, யந்திர 'எஞ்சினீயரிங்' பாடங்களில் மூன்ருண்டு 'டிப்ளோமா' பயிற்சி தரப்படும் எனத் தெரிகிறது.

இந்தியாவில் 1939ல், ஆயிரம் பேருக்கு 0.2 டெலிபோன் வீதம் இருந்தது; இன்று அந்த விகிதம் 07 ஆக உயர்ந்திருக்கிறது—ஆனல், இந்த விகிதத்தை, 1961-ம் ஆண்டு இறுதிக்குள், 1.25 ஆக உயர்த்துவதே இந்திய சர்க்காரின் இலட்சியமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் அண்ணா

மாநில மாநாட்டுப் பங்குத் தொகை ரூ. 2,001-ம் அளித்துவிட்டனர்

★

துவரங்குறிச்சி

22—6—55 மாலை 6 மணிக்கு முக்கூட்டுச்சாலைமுனையில் துவரங்குறிச்சியில், தி. மு. கழகத் தோழர்கள் வாழ்த்தொலிகளுடன் இன்னிசைக் கருவிகள் முழங்க அண்ணா அவர்களையும், அவர்தம் குழுவினரையும் வரவேற்றனர்.

அண்ணா அவர்கள் தி. மு. கழகக் கொடியேற்றி வைத்த பின்னர் தோழர் எ. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். எஸ் இளங்கோ, அ. பொன்னம்பலனார், கே. எ. மதியழகன், அண்ணா ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிக் கூறி, திருச்சியில் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டுக்கு அனைவரும் திரண்டு வரும்படியும், எதிர்கால ஆக்க வேலைகட்கும், போராட்டங்களுக்கும் ஆதரவு தரும்படியும் கேட்டுக் கொண்டனர். பின்னர், கிளைக் கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 25-ம், கழகத் தோழர்களால் அண்ணா அவர்கட்கு அணிவிக்கப்பட்ட காலணா மாலைகள் மூலமாக ரூ. 6—4—9ம், ஆக மொத்தம் ரூ. 31—4—9-ம் அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

★

முத்துப்பேட்டை

22—6—55 மாலை 7 மணிக்கு அண்ணா அவர்கள் தம் குழுவினருடன் இவ்வூர் வந்து சேர்ந்தார்கள்; எல்லையில், தி. மு. கழகத் தோழர்கள் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலியுடன் அவர்களை வரவேற்று, பொதுக்கூட்ட மேடைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்; நகர் முழுவதும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அ. பொன்னம்பலனார், நா. தருமலிங்கம், கே. எ. மதியழகன் ஆகியோர் பேசிய பின் அண்ணா அவர்கள் வடவர் ஆதிக்கம் பற்றியும், காங்கிரசார் ஆட்சியில் மக்கள் அடையும் அவதி குறித்தும், திராவிட நாடு திராவிடருக்கானால்தான் திராவிடம் வளம்பெற முடியுமென்றும், அப்போதுதான் திராவிட இன விவசாயிகள், தொழிலாளர்கள் நிலை உயருமென்றும் விரிவுரையாற்றினர்.

கிளைக் கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 128-13-0 அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

★

மாயவரம்

23—6—55 மாலை 7 மணிக்கு மாயவரம் நகரப் பூங்காவில் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் மாநில மாநாட்டு நிதியளிப்பு—பொதுக்கூட்டம் நடைபெற்றது

உள்ளூர் — வெளியூரிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் க. அறிவழகன், என். எஸ். இளங்கோ, அ. பொன்னம்பலனார், கே. எ. மதியழகன் ஆகியோர் பேசிய பின், அண்ணா அவர்கள், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், ஐந்தாண்டுத் திட்டத் தோல்வியையும், வடவர் ஆதிக்கம் ஒழிந்து, திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

மேலும் அண்ணா அவர்கள் பேசுகையில், காங்கிரஸ் ஆட்சியாளர் இப்போதிருக்கிற பணக்காரர்கள் மேலும் மேலும் இலட்சாதிபதிகளாகவும், கோடீசுவரர்களாகவும் வளருவதற்கே திட்டமிட்டு வேலை செய்துவருவதாகக் குறிப்பிட்டார்.

"ஒரே ஆண்டில் பாலைவனத்தை சோலைவனமாக்கி உழைப்பால் உயர்ந்த மக்கள் வாழும் ரஷ்ய நாட்டையும் அங்குள்ள காட்சிகளை காண்கிறார் நேரு; ஆனால், அவரது ஆட்சியின் கீழ் உள்ள இந்த நாட்டில்—குறிப்பாகத் திராவிட நாட்டில், கடந்த 7 ஆண்டுகளாக நெய்வேலி நிலக்கரி பற்றிய பிரச்சினையில், வெறும் 'கண்துடைப்பு' காரியங்கள்தான் நடைபெற்று வருகின்றன," என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், மாநில மாநாடு பற்றியும், கழகத் தோழர்கள் கடமை பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாநில மாநாட்டுநிதிக்காக ரூ 182-8-3-ம், தஞ்சை மாவட்டக் கழகச் சார்பில் ரூ 25-ம், ஆக ரூ. 207-8-3 அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதிப் பங்காக ரூ. 2,001 அளிக்கப்பட்டு விட்டதென்ற செய்தியை மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

அவ்வமயம் அண்ணா அவர்கள், "தஞ்சை மாவட்டம், மாநில மாநாட்டின் பங்குத் தொகையை கொடுத்திருக்கலாம்; ஆனால், மேலும் கொடுக்கப்பட வேண்டிய 'பங்குத் தொகை' அதிகமிருக்கிறது—வளங்கள் மிகுந்த தஞ்சை மாவட்ட தோழர்களுக்கு," என்று குறிப்பிட்டார்.

★

திருமணங்கள்

23—6—55 காலை 9 மணிக்கு திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள வேளூரில் 'திராவிட நாடு' துணையாசிரியர் தோழர் இராம-அரங்கண்ணல் அவர்களது மைத்துனர்கள் தோழர் கோ. வெங்கட்ராமன்—தோழியர் யசோதை; தோழர் கோ. சந்தானம்—தோழியர் செல்வமணி ஆகியோர் திருமணங்கள் அண்ணா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. எ. மதியழகன், தில்லை-வில்லாளன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

இறுதியில் அண்ணா அவர்கள், திருந்திய திருமணத்தின் சிறப்புகள் குறித்தும், காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற முறையில் திருமணங்களைச் செய்துகொள்ள பேருதவியாக நின்ற மணமக்களின் பெற்றோர்களைப் பாராட்டியும் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்து மடல்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 10 - நன்கொடை தரப்பட்டது—பெற்றுக்கொண்டோம் — நன்றி — பொறுப்பாளர்.

★

பெயர் சூட்டல்

23—6—55ல், மாயவரத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் சங்கய்யன் அவர்களது பெண் மகவுக்கு அண்ணா அவர்கள் 'செந்தாமரை' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு 101 அணுக்கள் (ரூ. 6—5—0) நன்கொடை தரப்பட்டது—பெற்றுக்கொண்டோம் — நன்றி — பொறுப்பாளர்.

காரைக்காலில் பொதுச் செயலாளர்

பாராட்டும் - பொதுக் கூட்டமும்

21—6—55 மாலை 6 மணி அளவில், சேமியன்குளத் திடலில், ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் க. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காரைக்கால்-பாண்டியன், காகூர்-ஜெயச்சந்திரன், சிசேசவரி, பி. ஜம்பு, அறிவுடைநம்பி, ப. அ. கரீம் ஆகியோர் பேசிய பின்பு பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேச ஆரம்பித்தார். 20-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களின் சார்பில் வரவேற்புரைகளும், கைத்தறித் துணிகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் அவர்கள், திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கியதுடன், புதுவை மாநிலத்தில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தி. மு கழகம் கலந்துகொள்ளாதென்றும், கழகக் கொடி, கழகப் பிரசாரம் யாருக்கும் கிடைக்காது என்றும் குறிப்பிட்டார்.

கடைசியாக, நாகூர்-அனீபா அவர்கள் இசை வழங்கினர்.

திருமணம்

9—6—55-ல், அண்ணாமலை நகர் சந்திர மஹாலில், தோழர் சிங்காரம்—தோழியர் சரோஜா திருமணம், தோழர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. திருமாறன், உத்திராபதி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது— வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

• • •

13—6—55ல், லெப்பைக்குடிக்காடு தோழர் எம். கே. முகமது காசிம்—தோழியர் கதீசா பேகம் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

மட்ட ரக தானியங்களால் தொல்லை!

புதிய நோய்க்கு வாலிபர்கள் பலி!

ரீவா, ஜூன், 23—

விந்தியப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் ஒரு புதிய ரகமான நோய்க்கு பலியாகிவருகின்றனர். தங்கள் உழைப்புக்குக் கூலியாகப் பெற்றுவரும் மட்ட ரகத் தானியங்களை உட்கொண்டதினாலேயே, அப்புதிய வியாதி ஏற்பட்டிருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள்.

தட்டுத்தடுமாறி நிற்றல், தலையாட்டம், பலமிழந்த கால்கள் ஆகிய அறிகுறிகள் அந்நோயின் தன்மையை விளக்கிக் காட்டுவனவாக உள்ளன.

அப்புதிய நோய்க்கு பலியானவர்கள், சாதாரண மக்களைக் காட்டிலும் வேகமாக நடப்பவர்கள் போன்று காணப்படுகின்றனர். ஆனால் உண்மையில் அது வெறும் மயக்கத் தோற்றமேயாகும். அந்நோயாளிகளின் கால்களைத் தாக்கியுள்ள பாரிச வாயுவின் காரணமே, அதற்குரிய காரணம் என தெரிய வருகிறது.

அந்த நோய் பெரிதும் 15 முதல் 20 வயது வரை உடைய வாலிபர்களையே பாதித்திருக்கிறது.

ஒரு மறுப்பு

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் கி சோழன் அறிவிக்கிறார்:—

வெளியூர் 21—6—55 'தினத்தந்தி' இதழில், இரண்டாம் பக்கத்தில், நான் பேசியதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி, நான் பேசிய செய்திக்கு மாறுபட்டதாகும்.

"சமாதானத் தூதுவராக உலகெங்கும் சுற்றிவருகிற நேரு—அண்மையில் ஆசியா — ஆப்பிரிக்கா மாநாட்டில் காலனி ஆதிக்கம் ஒழியவேண்டுமென்று வானதிரப் பேசிய நேருதான், திராவிடத்தை, ஒரு காலனி நாடாகவே மதித்து நடத்தி வருகிறார்;

"இந்தியத் துணைக்கண்டமெங்கும் — வடக்கே அகாலிதளக் கிளர்ச்சி; பஞ்சாப் மாகாணக் கிளர்ச்சி; நாகர் தனிநாடு கிளர்ச்சி; இங்கே, திராவிட நாடு வேண்டுமென்ற நமது உரிமைக் கிளர்ச்சி; இப்படி நாடெங்கும் கிளர்ச்சிகள் நடந்தவண்ணமுள்ளது; என்றாலும், ஓடுகிறார் — சீனாவிற்கும், ரஷ்யாவிற்கும்—சமாதானத் தூதுவராக!"

என்றுதான் பேசினேன்; 'தினத்தந்தி' தனது வழக்கமான முறையிலேயே இந்த செய்தியையும், திரித்து எழுதியிருக்கிறது; 'தினத் தந்தி'யின இந்த விபரீதமான போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆக்கத் துறைக்கு உதவ அமெரிக்கா-ரஷ்யா போட்டி

ஜனநாயக — கம்யூனிஸ்டு நாடுகளுக்கு அணுசக்தி உற்பத்தி சாதனங்கள் உதவி

செக்கோஸ்லவேக்கியா, சீனா, போலந்து, ருமேனியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு, அணுசக்தி உற்பத்திக்கு அவசியமான இயந்திர சாதனங்களையும், உலோகப் பொருள்களையும், மற்றும் தொழில் நுணுக்க நிபுணர்களையும் சோவியத் ரஷ்யா கொடுத்து உதவும். அணுசக்தி உற்பத்தி சம்பந்தமான இயந்திர சாதனங்களைப் பூட்டி இயக்குவதற்கும் ரஷ்ய நிபுணர்கள் அந்நாடுகளுக்கு உதவி அளிப்பார்கள்.

ஆக்க வேலைகளுக்காக ஜனநாயக நாடுகளுக்கு அணுசக்தி உற்பத்தி சாதனங்களைத் தந்து உதவுவது பற்றி அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

அணுசக்தி உற்பத்தி செய்வதற்கு உதவும் இயந்திர சாதனங்களைப் பெறும் ஜனநாயக நாடுகளுக்கு ஏற்படும் பாதிச் செலவை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுமாம்; அன்றியும், அணுசக்தி உற்பத்திக்குப் பொருத்தமான உலோகப் பொருள்களையும் அமெரிக்கா அந்த நாடுகளுக்குக் கொடுத்துதவக் கூடுமாம்; மேலும், ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியை உபயோகிப்பதற்கு அவசியமான உற்பத்தி நுணுக்கத் துறைகளில் பயிற்சி அளிப்பதற்கு அந்த நாடுகளுக்கு அமெரிக்கா உதவி செய்யுமாம்!

சோவியத் ரஷ்யா, தான் உதவியளிக்கும் நாடுகளுக்கு, மேற்குறிப்பிட்டவைகளன்றி, விவசாயம், வைத்தியம், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் உபயோகிப்பதற்கு 'ரேடியக் கிளர்ச்சி'யுள்ள பொருள்களையும் தருமெனக் கூறப்படுகிறது.

ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளும் அணுசக்தி உற்பத்தி செய்வதற்கு, உதவி தரத் தயாராக இருப்பதற்கு ரஷ்யா அறிவித்துள்ளதாம்.

'தமிழ் மொழி சிங்களத்தைப் போன்றே சம உரிமை பெறும்!'

இலங்கை மக்கள் சபையில் கொத்தலாவலை உறுதிமொழி

கொழும்பு, ஜூன் 24—

இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை, இலங்கையில் தமிழுக்கும், சிங்களத்திற்கும் சமஉரிமையும், அந்தஸ்தும் தரப்படும் என்றும், மதுவிலக்கு அமுல் செய்யப்படுமென்றும் மக்கள் சபையில் உறுதி மொழி தந்திருக்கிறார்.

சர்க்காரின் மொழிக் கொள்கை தமிழர்களுக்கு சந்தேகத்தையும், அச்சத்தையும் ஊட்டுவதாக இருப்பதாக தமிழ் உறுப்பினர்கள், கவர்னர்-ஜெனரலின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தம் கொண்டு வந்தனர்; அந்தத் திருத்தத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது தான், பிரதமர், மேற்படி உறுதிமொழியைத் தந்தார்.

மேலும் குடிப்பழக்கம் அன்னியரால் புகுத்தப்பட்டது எனவும், அந்த பழக்கத்தை ஒழிக்க பிரச்சாரம் செய்வதை எவரும் தடுக்க முடியாதெனவும், சர்க்கார் மதுவிலக்குக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது எனவும், மதுவிலக்கு சீக்கிரமே அமுல் செய்யப்படுவதுடன் சூதாட்டமும் தடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

பட்டுவாடா செய்ய முடியாத நாற்பது லட்சம் கடிதங்கள்!

இதுவரை எப்போதுமில்லாத அளவு—சுமார் 40 லட்சம் கடிதங்கள், சாமான்கள் ஆகியவை பட்டுவாடா செய்யப்பட முடியாத நிலையில், கல்கத்தா 'மரண அஞ்சல் நிலைய'த்தில் வந்து சேர்ந்தனவாம்.

அவைகளை அனுப்பியவர்கள் அல்லது, அவைகள் பட்டுவாடா செய்யப்பட வேண்டியவர்கள் ஆகியோரின் முகவரியைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அந்த அலுவலகத்தார் ஈடுபட்டபோது, அந்தத் தபால்கள், சாமான்களிலிருந்து சுமார் ரூ 83 ஆயிரம் பெறுமான 'செக்'குகள், நோட்டுகள், நாணயங்கள் இருந்தனவாம்.

இவற்றில், சுமார் 19 லட்சம் கடிதங்கள், சாமான்கள் எல்லாம், குறைவான அல்லது தெளிவற்ற நிலையில் 'முகவரி' எழுதப்பட்டிருந்தனவாம்.

3,209 கடிதங்களில், எந்த முகவரியுமே இருக்கவில்லையாம்!

என்றாலும், சுமார் 31 லட்சம் கடிதங்கள், சாமான்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட முகவரியிலோ அல்லது அவற்றை அனுப்பியவர்களுக்கோ பட்டுவாடா செய்வதில் அஞ்சல் நிலையத்தவர் வெற்றி பெற்றிருக்கின்றனராம்!

கண்ணபிரானுக்குப் பாராட்டும் இளம்பரிதிக்கு வரவேற்பும்

சிறந்த தேனீர் விருந்து — உயர்ந்த கருத்துப் படையல்

சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானுக்கு பாராட்டும், புதிய செயலாளர் தோழர் இளம்பரிதியை வரவேற்கவும் விழா ஒன்று சென்னை 'அறிவகத்'தில் 26—6—55-ல் நடைபெற்றது. விழாவை ஒட்டி, 'அறிவகம்' விசேட மின்சார விளக்குகளாலும், கழகக் கொடிகள்—தோரணங்களாலும், அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

துவக்கத்தில், அண்ணா அவர்களுடனிருந்து, சென்னை மாவட்ட கழக உறுப்பினர்கள் புகைப்படம் பிடித்துக்கொண்டனர்.

அடுத்து, தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது.

பின்பு விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, அண்ணா அவர்களை தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் முன்மொழிந்தார்; தோழர் மணிவண்ணன், வழிமொழிந்தார். அண்ணா அவர்கள் தலைமை ஏற்றுக்கொண்டதும், புதிய செயலாளர் இளம்பரிதியை வரவேற்று தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரானுக்கு பாராட்டிதழ் ஒன்றினை மாவட்ட கழகச் சார்பில் தோழர் அ. பொ. அரசு வாசித்தளித்தார்.

பின்னர், தோழர்கள் இளம்பரிதி, கண்ணபிரான் ஆகியோர் தங்களுக்கு முறையே அளிக்கப்பட்ட வரவேற்பு — பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

அடுத்து இருவரையும் பாராட்டியும், வரவேற்றும் தோழர்கள் அ. பொன்னம்பலனர், காஞ்சி-கல்யாணசுந்தரம், டி. வி. நாராயணசாமி, கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் இருவரையும் பாராட்டியும் வரவேற்றும் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

விழாவில், அண்ணா, அ. பொன்னம்பலனர், காஞ்சி - கல்யாணசுந்தரம், மதியழகன், கருணாநிதி, எம். எஸ். மணி, பராங்குசம், கோபாலகிருஷ்ணன், டி. வி. நாராயணசாமி, எஸ். கசேந்திரன், ப. வாணன், எஸ். எஸ். பி. லிங்கம், இராம. வெள்ளையன், இராம சுப்பையா, முகவை-ஆர். எஸ் பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கோவை மாவட்ட செயலாளர் ஈ. வெ. கி சம்பத், தெ. ஆ. மாவட்ட செயலாளர் ஆர். சாம்பசிவம், திருச்சி மாவட்ட செயலாளர் அம்பில்தருமலிங்கம், சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

விழா நிகழ்ச்சிகள், ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

'பதவி நீங்கினும் தொடர்ந்து பணிபுரிவேன்'

தோழர் கண்ணபிரான் உறுதிமொழி

தோழர் கே. எம். கண்ணபிரான் தனக்கு வழங்கப்பட்ட பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நான் பணிபல புரிந்ததாகக் கூறியிருக்கிறீர்கள்; அதற்காகப் பாராட்டியிருக்கிறீர்கள்; ஆனால், நான் ஏதேனும் பணியாற்றி வெற்றி பெற்றிருந்தால் அதற்கு உங்களின் ஒத்துழைப்பும், அண்ணா அடிக்கடி வழங்கிய ஆலோசனைகளும்தான் காரணம்; நான் செயலாளராயிருந்த காலத்தில் என்னுடன் ஒத்துழைத்த அத்தனை நண்பர்களுக்கும், தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; பாராட்டுரை வழங்கி என்னை ஊக்குவித்தமைக்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"நான் செயலாளராக இப்போது இல்லாவிடினும், செயலாளராக இருந்த காலத்தில் பணி ஆற்றியதுபோலவே தொடர்ந்து தொண்டாற்றுவேன் என்ற உறுதியையும் உங்களுக்கு அளிக்கிறேன்."

பின்னர் தோழர் இளம்பரிதி தனக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நான் மிகச் சாமானியன்—சாதாரணமானவன் — உழைப்பாளி; என்னை மாவட்டச் செயலாளராக்கி, எனக்குப் பெரும் பொறுப்பைத் தந்திருக்கிறீர்கள்; என்னிடம் நீங்கள் தந்திருக்கிற பொறுப்பை நான் திறம்பட நிறைவேற்ற உங்கள் அனைவரின் மனப்பூர்வமான முழு ஒத்துழைப்பையும் கோரி நிற்கிறேன்.

"எந்தக் காரியமும் தனிப்பட்டவர்களால் செய்யப்பட முடியாது; பலர் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதின் மூலம்தான் வெற்றி பெற முடியும்.

"எனவே, நீங்கள் எல்லோரும் உங்களுடைய பேராதரவினையும், ஒத்துழைப்பையும், நமது மாவட்டக் கழக நடவடிக்கைகள் அத்தனைக்கும் தந்து, நம்மை எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடியான எதிர்காலத்தில் கழகம் வெற்றி பெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்; எனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் கோவை வருகை

★

"3—7—55 ஞாயிறு அன்று, கோவை சிதம்பரனார் பூங்காவில், கோவை மாவட்ட, நகர கழகங்களின் சார்பாக, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மகத்தானதோர் வரவேற்பு அளிக்கப்படும். விழாவிற்குமுன், ஊர்வலம் ஒன்றிற்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

"விழாவின்போது மாநில மாநாட்டு நிதியில் கோவை மாவட்டத்தின் பங்குத் தொகையினைப் பொதுச்செயலாளரிடம் அளிக்கவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

"அதே நாளில் காலை 10 மணி அளவில், கோவை மாவட்டத்தில் உள்ள அத்தனைக் கிளைக் கழகங்களின் செயலாளர்களையும், மாவட்டக் கழக உறுப்பினர்களையும் கொண்ட கூட்டம் ஒன்று பொதுச்செயலாளர் முன்னிலையில் நடைபெறும். இடம் முதலிய விவரங்கள பின்னர் அறிவிக்கப்படும்.

"மாநில மாநாட்டு நிதிக்காக மாவட்டக் கழகத்தால் ஒவ்வொரு கிளைக்கும் விதிக்கப்பட்ட தொகையினை இதுவரை அனுப்பி வைக்காத கிளைகள் இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தமது பங்கில் முழுமையும் அனுப்பாமல் குறை வைத்திருக்கும் கிளைகளும், குறையையும் அனுப்பி வைத்து நிறைவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது,"

என்று, கோவை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

★

நாடமுகானந்தல்

அரசமர முன்புறத்தில்

29—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ப. நா. பச்சமுத்து

பேசுபவர் :

ப. உ. சண்முகம்

பாராட்டு விழாவில் தோழர்கள் பேச்சு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

யாக பணியாற்றவேண்டும் என்பது தான்.

"தாம் பதவியிலிருந்து விலகியிருந்தாலும், பணியாற்றுவதிலிருந்து விலகிவிடவில்லை,' என்று தோழர் கண்ணபிரான் கூறினர். அதைப்போலவே, எல்லோரும், பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு ஒற்றுமையுடன் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

★

பின்னர் காஞ்சி கல்யாணசுந்தரம் பேசியதும், நடிகர் தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள், கண்ணபிரானையும், இளம்பரிதியையும் பாராட்டியும், வரவேற்றும் பேசிய பின், தோழர் மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"'தோழர் இளம்பரிதி நன்றி தெரிவித்துப் பேசுகையில், 'நான் ஒரு சாமானியன்,' என்று குறிப்பிட்டார்.

"சாமானியர் அவர் மட்டுமல்ல; கழகத்தில் உள்ள அத்தனை பேருமே சாமானியர்கள்தான்; எவரும் பெருந்தனக்காரராகவோ, சாம்ராஜ்யாதிபதிகளாகவோ இருக்கவில்லை.

"அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்—'இது, சாமானியர்கள் காலம்'—என்று!

"எனவே, தோழர் இளம்பரிதி அவர்கள் தனக்குத் தரப்பட்டிருக்கிற பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு, 'சாமானியர்' என்பது குறுக்கே நிற்கமுடியாது; அதுபோலவே, அவர், 'தமது வலுவிழந்த கரங்களை வலுப்படுத்த வேண்டும்—தோழர்கள் தங்கள் ஒத்துழைப்பால்,' என்று கேட்டுக்கொண்டார்; ஆனால், அவருக்கு தோழர்கள் எப்போதும்போல் ஒத்துழைப்பு தரக் காத்து நிற்பர்—தயங்கமாட்டார்கள்; தனது வலுவில்லாத கரத்தை வலுப்படுத்தத் தோழர்கள் பலர் இருக்கிறார்கள் என்றும், எல்லாத் தோழர்களின் ஒத்துழைப்போடும் அவர் பணியாற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

"தோழர் கண்ணபிரான், நமது கழகம் நடத்திய போராட்ட காலத்திலும், வேறுபல முக்கியமான சம்பவங்கள் நடைபெற்ற நேரத்திலும் செயலாளராயிருந்து அரும்பணியாற்றியவர்; அவரது பணி தோழர்களுக்கு உற்சாகமூட்டும் வகையிலும், தோழர்களின் பேராற்றலை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது; அவரது பணிக்கு பாராட்டுத் தெரிவிக்க நாம் எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம்."

பின்னர் தலைவர் முடிவுரை கூறியதும், நன்றி தெரிவித்துப் பேசிய தோழர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"'சென்னை மாவட்டக் கழகத்திற்கென, தனிக்கட்டிடம் ஒன்று அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் யோசனை தெரிவித்தார்கள்; அவர்கள் யோசனைப்படியே நாமும் சென்னை மாவட்டத்திற்கென ஒரு கட்டிடம் வாங்குகிற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும்; இதற்கு, முதன் முதலில் நமது அண்ணா அவர்களிடமே நன்கொடை பெறமுடியும்......"

அண்ணா அவர்கள் குறுக்கிட்டு, தான் ரூ. 100 நன்கொடை தருவதாக அறிவித்தார். தொடர்ந்து, 'தோழர் மு. கருணாநிதி ரூ. 100 தருவார்', என்றும் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்போது தோழர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரப் பேரொலி எழுப்பினர்.

தொடர்ந்து என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது :—

"அண்ணா அவர்களும், தோழர் கருணாநிதியும் நன்கொடை தர உறுதி தந்துவிட்டனர். இனி நாம் முழு முயற்சியும் செய்து சென்னை மாவட்டத்திற்கு ஒரு தனி அலுவலகமும், ஒரு புத்தகசாலையும் அமைக்கப் பாடுபடுவோம்.

"மேலும் நமது அழைப்பிற்கு இணங்கி வருகை தந்த அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

"சிற்றுண்டி. சீரிய முறையில் ஏற்பாடு செய்திருந்த கருணாகர் விலாஸ்,' 'ஐஸ்கிரீம்' வழங்கிய (இலவசமாக) தோழர் இராம - வெள்ளையன், மற்றும் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்ய இயந்திர வசதிகள் செய்து தந்த தலைமைக் கழகத்தார் ஆகியோருக்கு நம் மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

அண்ணா அன்பழைப்பு...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

அந்த மைதானத்தில் கள்ளியும், காளானும் இருந்தால் அவற்றை அகற்றிவிட்டு, சுற்றுச் சுவர் எழுப்பி, ஒரு திறந்த வெளி அரங்கு நிர்மாணித்தாக வேண்டும்.

"கள்ளி காளானை அகற்றவும், சுற்றுச் சுவர் எழுப்பவும், அரங்கு அமைக்கவும் ஒரு சில கட்டிடத் தொழிலாளர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்;

"அவர்களுடன் வேலை செய்வதற்காகவென நான் உங்களை அழைப்பேன்; அப்போது நீங்கள் உங்கள் உழைப்பைத் தரத் தயாராக இருக்க வேண்டும்.

"கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக சென்னை மாவட்டச் செயலாளராயிருந்த தோழர் கே. எம். கண்ணபிரானைப் பாராட்டவும், புதிய செயலாளராக வந்திருக்கிற தோழர் இளம்பரிதியை வரவேற்கவும் இந்த விழா நடைபெறுகிறது.

"எனக்கு முன் பேசியவர்கள் கூறியதுபோல, தோழர் கண்ணபிரான் செயலாளராக இருந்த காலத்தில், கழகம் பல நெருக்கடியான கட்டங்களைத் தாண்டி வந்திருக்கிறது; அந்த நெருக்கடியான நேரங்களில் எல்லாம், தோழர் கண்ணபிரானின் உழைப்பு மிகவும் பாராட்டலுக்குரியது.

"தோழர் கண்ணபிரான் எனக்கு பிடித்தமான கழகத் தோழர்களிலே ஒருவர்; அவர் ஆற்றிய பணி குறித்து, நாம் எல்லாரும் அவரைப் பாராட்டுவது மிகச் சிறந்ததே.

"அதேபோலே அவருக்குப் பிறகு செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தோழர் இளம்பரிதியையும் வரவேற்கிறோம்—மேலும் தொடர்ந்து நல்ல பல பணியாற்றுவதற்காக!

"தோழர் கண்ணபிரான் பேசுகையில், 'நமது அண்ணா அவர்கள் அடிக்கடி, அடிக்கடி...' என்று இழுத்தாற் போலப் பேசினார்; 'அண்ணா அடிக்கடி தொல்லைப் படுத்தினார்,' என்றும் கூறலாம்; அல்லது, 'அடிக்கடி ஆலோசனைகள் தந்தார்,' என்றும் அவர் கூறலாம்;

"நான் தொல்லைகள் தந்திருப்பேன்—அவை எல்லாம், கழக வேலைகள் நடைபெறவேண்டியதற்காக இருக்குமே தவிர, வேறெதற்காகவும் இராது; நான் தொல்லைகள் தருவது, தோழமை உணர்வால்; அந்தத் தோழமை உணர்வுதான் சட்டதிட்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் கவனிக்கப்படவேண்டியது.

"வேறெல்லா மாவட்ட தோழர்களையும்விட, சென்னையில் உள்ள தோழர்கள், சட்டதிட்டம் பற்றி நன்றாக அறிந்திருக்கக்கூடும்;

"சட்டதிட்டம் பற்றி விவாதிக்கத்தான் வேண்டும்; ஆனால், நாம் நடத்துகிற விவாதம், நமக்கு நாளாவட்டத்தில் ஒளியைத் தரவேண்டும்—தெளிவைத் தரவேண்டும்—வெப்பம் தரக்கூடாது; எது பற்றியும் நாம் நடத்தும் விவாதம் நமக்கு ஒளியை மிகுவித்து, வெப்பத்தைக் குறைப்பதாக இருக்கவேண்டும்.

"'பல வளையங்கள் கொண்ட சங்கிலியின் பலம், அந்தச் சங்கிலியில் உள்ள மிக நைந்துபோன வளையத்தின் பலவீனத்தைப் பொறுத்திருக்கிறது,' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு; நைந்து போன வளையம் உடைந்துவிட்டால் சங்கிலி அறுந்துவிடும்; அதுபோலத்தான், நமது பலமும்; எனவே, தோழர்கள், தோழமை உணர்வுடன், சங்கிலித் தொடர்புடைய நமது இயக்கத்தில் பணிபுரிய வேண்டும்."

உதவியின்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எனவே, இதுபற்றி மாவட்ட மத்திய பாங்கிகள், என்ன செய்ய வேண்டுமென்பதை யோசிக்க வேண்டும்," என்று சென்னை மாநில கூட்டுறவு இயக்க ரிஜிஸ்திராரான ஏ. பழனியப்பா அவர்கள், திருநெல்வேலியடுத்த பெருங்குளம் கிராமத்தில், கிராம பாங்கி ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவுக்குச் சென்ற ஆண்டு வருகைதந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் மொத்த எண்ணிக்கை 40,000. அவ்வாண்டில், உல்லாசப் பிரயாணத் துறையின் மூலம் இந்தியாவுக்குக் கிடைத்த அந்நிய நாயணச் செலாவணி வருமானம் மொத்தம் ரூ. 5 கோடி ஆகும்.

திருமணம்

★

29—6—55 காலை 9 மணிக்கு, பூனமல்லி அடுத்த மேப்பூர் கிராமம், எண் 1/16, சம்பத்விநாயகர் கோவில் தெருவில், தோழர் கே. டி. அரசு—தோழியர் சரஸ்வதி திருமணம், தோழர் எஸ். ஏ. சகாதேவன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சைதை சம்பந்தம், டி. எம். சம்பந்தம், பி. சின்னசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.